## <u>உசிலம்பட்டி நகராட்சி மன்றம்</u>
## <u>நகர்மன்ற சிறப்புக்கூட்டம்</u>
<u>நாள். 31.1.2018 புதன்கிழமை   நேரம் : காலை 10.00 மணி</u>

---

## <u>நகர்மன்ற சிறப்புக்கூட்டம் : நாள். 31.1.2018</u>

<u>பொருள்: 1</u>

உசிலம்பட்டி நகராட்சியில் பேரிடர் நிவாரண நிதி (SDRF-II)—ன்கீழ் மூன்று உறிஞ்சு கிணறு அமைக்கப்பட்டுள்ளது. உறிஞ்சு கிணற்றிலிருந்து குடிநீரை எடுத்துச்செல்ல 160 எம்எம் அளவுள்ள குடிநீர் விநியோக குழாய் பதிக்கும் பணிக்கு ரூ. 5.45/— இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண். 9, நாள். 29.12.2017 அன்று அனுமதி வழங்கியதன் பேரில் 19.1.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

1.திரு. த.வையராஜா, ஒப்பந்ததாரர் என்பவர் மதிப்பீட்டை விட 0.45% குறைவு
2.திரு. ஆர்.ரவிக்குமார், ஒப்பந்ததாரர் என்பவர் மதிப்பீட்டை விட 0.44% அதிகம்

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. த.வையராஜா என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.குறைந்த ஒப்பந்தப்புள்ளியை கொடுத்துள்ள திரு. த.வையராஜா என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கலாம்.

**தீர்மானம் எண். 1** **நாள் : .31.1.2018**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

<u>பொருள்: 2</u>

உசிலம்பட்டி நகராட்சிக்கு எஸ்.மேட்டுப்பட்டி தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து வரும் பிரதான குழாய்க்கு தடுப்புச்சுவர் கட்டும் பணிக்கு ரூ. 8.50 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.3, நாள். 31.01.2017 அன்று அனுமதி வழங்கியதன்பேரில் 19.1.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

1.திரு. த.வையராஜா, ஒப்பந்ததாரர் என்பவர் மதிப்பீட்டை விட 0.23% குறைவு
2.திரு. ஆர்.ரவிக்குமார், ஒப்பந்ததாரர் என்பவர் மதிப்பீட்டை விட 0.75% அதிகம்

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. த.வையராஜா என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.குறைந்த ஒப்பந்தப்புள்ளியை கொடுத்துள்ள திரு. த.வையராஜா என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கலாம்.

**தீர்மானம் எண். 2** **நாள் : .31.1.2018**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

<u>பொருள்: 3</u>

உசிலம்பட்டி நகராட்சியில் உள்ள பேருந்து நிலைய மழைநீர் வடிகால்வாய் அமைப்பைப்பற்றிய புகைப்படம், பழைய குப்பை கிடங்கை ஹெலிகேமிரா வைத்து புகைப்படம் எடுக்கப்பட்டது. மேற்கண்ட இடங்களை புகைப்படம் எடுத்து நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட உள்ள காரணத்தால் அவசரம் அவசியம் கருதி பணி மேற்கொள்ளப்பட்டதற்கும் அப்பணிக்கான பட்டியல் தொகை ரூ. 12,250/–யை அப்பணி மேற்கொண்ட கே.பி.என்.ஸ்டுடியோ உரிமையாளர் திரு. பா.நாகராஜன் என்பவருக்கு தொகை வழங்க மன்ற அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்கண்ட பணிக்கான செலவுத்தொகையை பொதுநிதியிலிருந்து வழங்கலாம்.

**தீர்மானம் எண். 3** **நாள் : .31.1.2018**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

<u>பொருள்: 4</u>

உசிலம்பட்டி நகராட்சியில் வார்டு–16, கீழப்புதூர், மதுரை ரோடு, கழிப்பறையில் தண்ணீர் இல்லாததால் பொதுமக்கள் கழிப்பறையை பயன்படுத்துவதற்கு சிரமப்படுகின்றனர். எனவே, கழிப்பறைக்கு புதியதாக ஆழ்துளை கிணறு அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ. 4.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்கண்ட பணிக்கான செலவுத்தொகையை பொதுநிதியிலிருந்து வழங்கலாம்.

**தீர்மானம் எண். 4** **நாள் : .31.1.2018**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

<u>பொருள்: 5</u>

உசிலம்பட்டி நகராட்சியில் வார்டு–22, பேரையூர் ரோட்டில் அமைந்துள்ள நகர்நல மையத்தில் முன்பகுதியில் மண் கற்களாக ஒழுங்கற்ற பரப்பாக உள்ளதால் நோயாளிகள் மற்றும் வாகனங்கள் செல்வதற்கு இடையூறாக இருப்பதால் முன் பகுதியில் சிமெண்ட் தளம் மக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ. 3.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்கண்ட பணிக்கான செலவுத்தொகையை பொதுநிதியிலிருந்து வழங்கலாம்.

**தீர்மானம் எண். 5** **நாள் : .31.1.2018**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**பொருள்: 6**

உசிலம்பட்டி நகராட்சி வத்தலக்குண்டு ரோடு, உ.வாடிப்பட்டி, உத்தப்பநாயக்கனூர் கிராம புல எண். 87—ல் உள்ள இடத்தில் புதிய உரக்கிடங்கு அமைக்கும் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. செயலாக்க இயந்திரங்கள் மற்றும் இதர பயன்பாட்டிற்கு மின் மோட்டார் அறை அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ. 3.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு:-**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்கண்ட பணிக்கான செலவுத்தொகையை பொதுநிதியிலிருந்து வழங்கலாம்.

**தீர்மானம் எண்.6** **நாள் : .31.1.2018**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**பொருள்: 7**

உசிலம்பட்டி நகராட்சிக்கு உ.வாடிப்பட்டி, உத்தப்பநாயக்கனூர் கிராம புல எண். 87—ல் உள்ள இடத்தில் புதிய உரக்கிடங்கு அமைக்கும் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. சுற்றுச்சுவர், கிணறு அமைக்கும் பணி நடைபெற்று முடிவடைந்துள்ளது. மேலும், செயலாக்க இயந்திரங்கள் பொருத்துதல், மேற்கூறை அமைத்தல் ஆகிய பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இவற்றை பாதுகாக்கும் வண்ணம் காவலர் தங்குவதற்கு காவலர் அறை கட்டுவதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ. 4.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு:-**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்கண்ட பணிக்கான செலவுத்தொகையை பொதுநிதியிலிருந்து வழங்கலாம்.

**தீர்மானம் எண். 7** **நாள் : .31.1.2018**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**பொருள்: 8**

உசிலம்பட்டி நகராட்சி வார்டு—6, பேரையூர் ரோடு சாலையின் இருபுறமும் பிரதான குழாய்க்கு அருகில் துணைக் குடிநீர் குழாய் பதிக்கவிருப்பதால் ஏற்கனவே போடப்பட்ட பேவர் பிளாக்கை பிரித்து துணை குடிநீர் குழாய் பதித்தபிறகு சாலையின் இருபுறமும் பொதுமக்கள் நடந்து செல்வதற்கு இடையூறாக இருப்பதால் மீண்டும் பேவர் பிளாக் பதிக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ. 3.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு:-**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்கண்ட பணிக்கான செலவுத்தொகையை பொதுநிதியிலிருந்து வழங்கலாம்.

**தீர்மானம் எண். 8** **நாள் : .31.1.2018**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>பொருள்: 9</u>**

இந்நகராட்சி பொதுச்சுகாதாரப்பிரிவில் பொதுச்சுகாதாரப்பிரிவிற்கு தேவையான பொருட்களை (நோட்டு, பேனா், பூட்டு, போட்டோ) அவ்வப்போது பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட செலவினை திரு. அகமதுகபீா், துப்புரவு ஆய்வாளா் அவ்வப்போது மேற்கொண்டு ரூ. 7606/—க்கு (ரூபாய் ஏழாயிரத்து அறுநூற்றி ஆறு மட்டும்) ரசீது கொடுத்துள்ளாா். ரசீது தொகை ரூ. 7606/— மட்டும் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்கண்ட தொகை வழங்கவும், பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 3340/2016/எச்.1)

**தீர்மானம் எண். 9** **நாள் : .31.1.2018**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>பொருள்: 10</u>**

இந்நகராட்சி பொதுச்சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் வண்டி வாகன எண். டி.என்.58.பி.1272—க்கு தகுதிச்சான்றுப்பெற சில மராமத்துப்பணிகளும், மேலும் டோா் வேலைகளும் செய்ய வேண்டியுள்ளதால் ஓட்டுநா் தெரிவித்துள்ள பணிகளை மேற்கொள்ளவும் மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ. 90,000/—த்திற்கு (ரூபாய் தொன்னூற்று ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணிகளை மேற்கொள்ளவும், செலவுத்தொகையினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.300/2013/எச்.1)

**தீர்மானம் எண். 10** **நாள் : .31.1.2018**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>பொருள்: 11</u>**

இந்நகராட்சி பொதுச்சுகாதாரப்பிரிவில் டெங்கு தடுப்புப்பணிகளை மேற்கொள்ள டிசம்பா் 2017 முடிய 41 தற்காலிக மஸ்தூா் பணியாளா்கள் பணிபுரிந்து வந்த நிலையில் மேற்படி பணியாளா்களை ஜனவரி 2018 முதல் மாா்ச் 2018 முடிய மூன்று மாதங்களுக்கு தொடா்ந்து பயன்படுத்திக்கொள்ளவும். மேலும், 1 மாதத்திற்கு ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ. 3,00,000/—த்திற்கு (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.பொது சுகாதார நலன் கருதி தற்காலிக பணியாளர்களை தொடர்ந்து பயன்படுத்தி வருவதையும், மேலும் ஆகும் செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1919/2015/எச்.1)

**தீர்மானம் எண். 11** **நாள் : .31.1.2018**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**பொருள்: 12**

இந்நகராட்சி பொதுச்சுகாதாரப்பிரிவில் மருத்துவமனைகளில் இருந்து பிறப்பு அறிக்கையினை பெற பிறப்பு அறிக்கை / பிறப்பு பதிவேடு படிவம்–1 தற்போது இருப்பு இல்லாத காரணத்தால் தேவைப்படும் 5000 எண்ணிக்கை பிறப்பு அறிக்கையினை (படிவம்–1) உள்ளூர் நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி கோரி உடனடியாக பெற ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ. 15,000/–த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.பொது சுகாதார நலன் கருதி உடனடியாக பெறவும் மேலும், செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.992/2017/எச்.1)

**தீர்மானம் எண். 12** **நாள் : .31.1.2018**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**பொருள்: 13**

இந்நகராட்சி பொதுச்சுகாதாரப்பிரிவில் பிரதான சாக்கடைகளை தூர்வார ஜே.சி.பி. மற்றும் டிராக்டர் வண்டிகளை பயன்படுத்திக்கொள்ள விலைப்புள்ளி கோரியதில் வரப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

**விலைக்குறிப்பு**

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | ஜே.சி.பி. (1 மணி நேரம்) | டிராக்டர் ( 1 நாள் வாடகை) | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1 | கள்ளழகர் எர்த் மூவர்ஸ், உசிலம்பட்டி | ரூ. 750/– 1 நாள் படி ரூ. 450/– | ரூ. 3000 | II |
| 2 | வைகை எர்த் மூவர்ஸ், தேனி ரோடு, உசிலம்பட்டி | ரூ. 700/– 1 நாள் படி ரூ. 400/– | ரூ. 2500 | I |
| 3 | ஸ்ரீ மாசாணம் எர்த் மூவர்ஸ், சின்னக்கட்டளை | ரூ. 800/– 1 நாள் படி ரூ. 500/– | ரூ. 3500 | III |

வரப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் மிகக்குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வைகை எர்த் மூவர்ஸ், தேனி ரோடு, உசிலம்பட்டி அவர்களுக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின்அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.பொது சுகாதார நலன் கருதி மேற்கண்ட செலவுத்தொகையினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.845/2014/எச்.1)

**தீர்மானம் எண். 13** **நாள் : .31.1.2018**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**பொருள்: 14**

இந்நகராட்சி பொதுச்சுகாதாரப்பிரிவில் பொதுமக்களுக்கு டெங்கு காய்ச்சல், மலேரியா, பைலேரியா போன்ற நோய்களில் இருந்து தடுக்கும் பொருட்டும், மேலும், மழைக்காலங்களில் மழைநீர் தெருக்களில் தேங்காத வண்ணம் அனைத்து பிரதான சாக்கடை கால்வாய்களையும் ஜே.சி.பி. மற்றும் டிராக்டர் வண்டிகள் மூலம் தூர்வார ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ.5,00,000/—த்திற்கு (ரூபாய் ஐந்து இலட்சம்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.பொது சுகாதார நலன் கருதி மேற்கண்ட செலவுத்தொகையினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.845/2014/எச்.1)

**தீர்மானம் எண். 14** **நாள் : .31.1.2018**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**பொருள்: 15**

இந்நகராட்சி பேருந்து நிலையம் மற்றும் வார்டு—19, நகைக்கடை பஜார், நாடார் புதுத்தெரு, ஜவுளிக்கடை தெரு, பேரையூர் ரோடு, கிழக்கு (வண்டிப்பேட்டை) நந்தவனத்தெரு, சுப்பிரமணியம் தெரு, சத்தியசீலன் தெரு, அருணாச்சல நாடார் தெரு இரண்டு மூன்று சக்கர / நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துவதற்கு வாடகை வசூல் செய்வது சம்பந்தமாக தினகரன் நாளிதழில் 6.12.2017—ம் தேதியில் வெளியிட்டதற்கு ரூ. 16632/— KAL Publications Ltd. நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 15** **நாள் : .31.1.2018**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**பொருள்: 16**

உசிலம்பட்டி நகராட்சி எஸ்.மேட்டுப்பட்டி பேரணையில் அமைந்துள்ள மூன்று உறிஞ்சு கிணறுகளை இயக்க மோட்டார் அறை புதிதாக கட்டுவதற்கு ரூ. 9.95 இலட்சத்திற்கு நகர் மன்ற தீர்மான எண். 10, நாள். 29.12.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

1.திரு. த.வையராஜா, ஒப்பந்ததாரர் என்பவர் மதிப்பீட்டை விட 0.26 குறைவு
2.திரு. ஆர்.ரவிக்குமார், ஒப்பந்ததாரர் என்பவர் மதிப்பீட்டை விட 0.97 அதிகம்

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.த.வையராஜா என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு:-**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.குறைந்த ஒப்பந்தப்புள்ளியை கொடுத்துள்ள திரு. த.வையராஜா என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கலாம்.

**தீர்மானம் எண். 16** **நாள் : .31.1.2018**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**பொருள்: 17**

உசிலம்பட்டி நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளிலும் தெருவிளக்கு பராமரிப்பு பணி செய்யப்பட்டு வருகிறது. மின் விளக்குகளில் ஏற்படும் பழுதுகளை உடனடியாக சரிசெய்யும் பொருட்டு மின்சாதன உதிரிபாகங்களை ஸ்ரீசபரீஸ் டிரேடர்ஸ் நிறுவனத்திடமிருந்து ரூ. 1,81,010/—க்கு விநியோகம் செய்ததற்கு மன்ற அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு:-**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு (15)—ன்கீழ் பணி மேற்கொள்ளப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

3.பணிக்கான செலவுத்தொகையை பொதுநிதியிலிருந்து வழங்கலாம்.

**தீர்மானம் எண். 17** **நாள் : .31.1.2018**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**பொருள்: 18**

உசிலம்பட்டி நகராட்சியில் உள்ள 24 வார்டுகளுக்கும் குடிநீர் விநியோகம் செய்யும் குடிநீரில் குளோரின் கலந்திட சுமார் 1000 கிலோ அளவிலான பிளிச்சிங்க பவுடர் சப்ளை செய்த ஸ்ரீ சபரீஸ் டிரேடர்ஸ் நிறுவனத்திற்குதொகை ரூ. 30,000/— யை வழங்க மன்ற அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு:-**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு (15)—ன்கீழ் பணி மேற்கொள்ளப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 18** **நாள் : .31.1.2018**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**பொருள்: 19**

உசிலம்பட்டி நகராட்சியில் உள்ள வார்டு—6, பேரையூர் ரோடு பேருந்து நிலைய மேற்கு நுழைவு வாயில் உள்ள பாலத்திற்கு அடியில் உள்ள மழைநீர் வடிகால்வாயில் 20 வருடங்களாக மண் சேகரமானதால் தொடர்ந்து மழைநீர் வடியாமல் தண்ணீர் தேங்கி போக்குவரத்திற்கு இடையூறாக இருந்து வருகிறது. மேலும், நோய் தொற்று ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே, பழைய பாலத்தினை நீக்கிவிட்டு சேகரமான மண்ணை அள்ளிவிட்டு புதியதாக மழைநீர் வடிகால்வாய் மற்றும் பாலம் அமைக்கவும், மேலும் பேருந்து நிலையத்திற்குள் நூற்றுக்கணக்கான பேருந்து நிலையத்திற்குள் வருவதால் அவசர அவசியம் கருதி பணி ரூ. 6.00 இலட்சத்திற்கு மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு:-**

1.தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு (15)–ன்கீழ் பணி மேற்கொள்ளப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

2.பணிக்கான செலவுத்தொகையை பொதுநிதியிலிருந்து வழங்கலாம்.

**தீர்மானம் எண். 19** **நாள் : .31.1.2018**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**பொருள்: 20**

உசிலம்பட்டி நகராட்சியில் உள்ள வார்டு–6, பேரையூர் ரோடு சந்தை நுழைவு வாயில் உள்ள பாலத்திற்குள் அடியில் உள்ள மழைநீர் வடிகால்வாயில் 20 வருடங்களாக மண் சேகரமானதால் தொடர்ந்து மழைநீர் வடியாமல் தண்ணீர் தேங்கி போக்குவரத்திற்கு இடையூறாக இருந்து வருகிறது. மேலும், நோய் தொற்று ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே, பழைய பாலத்தினை நீக்கிவிட்டு சேகரமான மண்ணை அள்ளிவிட்டு புதியதாக மழைநீர் வடிகால்வாய் மற்றும் பாலம் அமைக்கவும், மேலும், சந்தைக்கு செல்லும் வாகனங்கள் செல்வதற்கும், பொதுமக்கள் செல்வதற்கும் இடையூறாக இருப்பதால் அவசர அவசியம் கருதி ரூ.4.90 இலட்சத்திற்கு பணி மேற்கொள்ளப்பட்டதற்கு மன்ற அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு:-**

1.தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு (15)–ன்கீழ் பணி மேற்கொள்ளப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

2.பணிக்கான செலவுத்தொகையை பொதுநிதியிலிருந்து வழங்கலாம்.

**தீர்மானம் எண். 20** **நாள் : .31.1.2018**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
உசிலம்பட்டி நகராட்சி